★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No· QB/8945/78

மலர்: 20 தை 24 ரபி-அவ் 8 இதழ்: 357

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6-2-79

RECEIVED 1979-2-6 PERIODICALS DIVISION

## மொரார்ஜி இன்று பாராளுமன்றத்தில் உரை

### பிற்பகல் நாடு திரும்புகிறுர்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இன்று காலை 10-30மணிக்கு பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவார்.

காலை 10-30 மணிக்கு பாராளுமன்றத்தைச்சென்றடையும் திரு. தேசாய் பாராளுமன்றத்தில் ஜனுதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் மார்பளவு உருவச் சிலையை திரைநீக்கம் செய்து வைப்பார். அதைத் தொடர்ந்தே பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 12-45க்கு திரு. மொரார்ஜி தேசாய் கட்டு நாயக்கா விமானநிலையத்திற்கு அரசபவனியாக அழைத்துச் செல்லப்படுவார்.

[6ம் பக்கம் பார்க்க]

★ பாரதப் பிரதமருடன் 'அமிர்' நடத்திய ஒருமணிநேர சந்திப்பு

# ஈழத் தமிழர் நிலை குறித்து தெளிவாக விளக்கப்பட்டது!

## ராஜாஜி கூறிய பிரதேச சுயாட்சி; காந்திஜீயின் மொழிவாரி மாகாண யோசனையும் பிரஸ்தாபம்

[நமது கொழும்பு நிருபர் சு. மகாலிங்கசிவம்]

ஈழத்தமிழர் நிலை, அவர்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைகள் பற்றி, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம், பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை நேற்று ஜனுதிபதி மாளிகையில் சந்தித்து ஒரு மணி நேரம் உரையாடினுர். இச்சந்திப்பின்போது ஈழத்தமிழர் எதிர்நோக்கும் பல்வேறு இன்னல்கள் - நெருக்கடிகள் குறித்து விபரமாகத் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம்; திரு. ராஜாஜி தெரிவித்த பிரதேச சுயாட்சி யோசனை பற்றியும், மகாத்மா காந்தியடிகள் கூறிய மொழி வாரி மாகாண கருத்துக்கள் பற்றியும் பிரஸ்தாபித்தார். இச்சந்திப்பு நேற்றுப் பிற்பகல் மூன்று மணிமுதல் நான்கு மணி பத்து நிமிடம்வரை நடைபெற்றது.



பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி — திரு அமிர்தலிங்கம் சந்திப்பின்போது, திரு அமிர்தலிங்கம் மட்டும் ஒரு தரப்பிலும், பாரதப் பிரதமருடன் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் மற்றும் இந்திய ராஜாங்க அமைச்சர், பிரதமரின் செயலாளர் ஆகிய மூவரும் மறு தரப்பிலும் கலந்துகொண்டனர்

மொரார்ஜி—அமிர் சந்திப்பு சரியாக ஒரு மணி பத்து நிமிடம் வரை பத்து நிமிடம் கூடுதாக நடைபெற்றது, சந்திப்பின் முடிவில் வர்த்தக அமைச்சர் திரு லலித்அத்துலத் முதலி வந்து, அடுத்த நிகழ்ச்சிபற்றிய நேரம்பற்றி நினைவுபடுத்தவே சந்திப்பும் முடிந்துகொண்டது, இதனுல் இலங்கை—இந்திய வர்த்தக கலாச்சார நட்புரிமைச் சங்கத்தினுல் ஏற்பாடுசெய்யப்பட்ட வரவேற்புபசாரத்துக்கு பிரதமர் தேசாய் குறிப்பிட்ட நேரத்திலும் பார்க்க பத்து நிமிடம் தாமதித்தே போய்ச் சேர்ந்தார்.

பாரதப்பிரதமருடன் திரு. அமிர்தலிங்கம் நடத்திய இச்சந்திப்பில், வேறு தலைவர்களோ அல்லதுஇலங்கைஅரசு அதிகாரிகளோ இடம்பெறவில்லை

பிரதமர் திரு மொரார்ஜி தேசாயை திரு அமிர்தலிங்கம் தனிமையில் சந்தித்து ஈழத்தமிழர் நிலைபற்றி பேச்சுக்கள் நடத்துவார் என்று 'ஈழநாடு' முதன்முதலாக செய்தி வெளியிட்டது வாசகர்கள் தெரிந்ததே.

### விரிவாக விளக்கம்

இலங்கைத் தமிழரின் கடந்த கால-நிகழ்கால-எதிர்கால நிலை குறித்து விரிவாக எடுத்துரைத்த திரு. அமிர்தலிங்கம், பல்வேறு துறைகளிலும் தமிழர் இங்கு நசுக்கப்படுவது பற்றியும், தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் திட்டமிட்ட குடியேற்றம், அரசாங்கத்தின் புதிய குடியேற்றத்திட்டங்கள் கல்வித் துறையில் அரசு கைக்கொள்ளும் இனவாரியான நடைமுறைகள், தரப்படுத்தல் மூலமாக தமிழ் மாணவர்கள் நசுக்கப்படும் அரசின் கல்வித் திட்டங்கள் தமிழ்ப்பகுதிகளில் கைத்தொழில் திட்டங்கள் அபிவிருத்திசெய்யப் படாத இப் பகுதிகளில் லாபத்தில் இயங்கும் பெரும் கைத்தொழில்களை மூடிவிடும் அல்லது வேறு இடங்களுக்கு மாற்றப்படும் அபாயம் ஆகிய பல்வேறு விஷயங்கள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்.



### பாதுகாப்பு இல்லையே!

பிரிந்து செல்லக்கூடிய நிலைக்கு ஈழத்தமிழர் ஆளாக்கப்பட்டிருப்பது குறித்து திரு அமிர்தலிங்கம் பிரதமர் திரு மொரார்ஜியிடம் விரிவாகக் கூறுகையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமே தமிழருக்குப் போதிய பாதுகாப்பு உண்டென்றும், மற்றைய மாகாணங்களில் தமிழர் பாதுகாப்புடன் வாழ முடியாதென்றும் கூறி, கடந்த வருடம் நடைபெற்ற இனக்கலவரம் பற்றித் தெளிவாகக் கூறினுர். தமிழ்ப்பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழர் பாதுகாப்புடன் வாழமுடியாது என்பதை கடந்த வருடக் கலவரங்கள் நிரூபித்துவிட்டன என்று பாரதப் பிரதமரிடம் விளக்கிய திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த வருட கலவரத்தில் அரசாங்கம் கூட பாதுகாப்பு தரவில்லையே - இது அரசுக்கும் தெரியும் என்று தெரிவித்தார்.

### மொரார்ஜி கருத்து

திரு. அமிர்தலிங்கத்தின் கருத்துக்களை மிகவும் உன்னிப்பாகவும் அமைதியாகவும் கேட்டுக்கொண்டிருந்த பாரதப் பிரதமர் ஒரு கட்டத்தில்,

''அநீதி இழைக்கப்பட்டால் அதனை எவரும் விட்டுக்கொடுக்க முடியாது. பாரபட்சம் காட்டப்பட்டால் அதனை எதிர்ப்பதில் தவறு இல்லை'' என்று கருத்துவெளியிட்டார்.

''அமைதியான முறையில், பேச்சுவார்த்தை மூலம் உங்கள் பிரச்னைகளை ஏன் தீர்க்க முடியாது?'' என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஒரு கட்டத்தில் கேட்டபோது;

''இதில் எங்களுக்கு நிறைய தோல்விகள் கிடைத்திருக்கின்

[6ம் பக்கம் பார்க]

### பாடசாலைக்குச் சென்றும்

## வகுப்புகளைப் பகிஷ்கரித்த ஆசிரியர்மீதும் நடவடிக்கை?

[யாழ்ப்பாணம்]

பாடசாலை பகிஷ்கரிப்பு நடைபெற்ற 1-ம், 2-ம் திகதிகளில் பாடசாலை சென்று வகுப்புகளை பகிஷ்கரித்த ஆசிரியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவர்கள் 1-ம், 2-ம் திகதிகளில் பாடசாலைகளுக்கு குறைவாக வந்திருந்தபோதிலும் ஆசிரியர்களில் சிலர் வகுப்புகளுக்குச் சென்று தமது கடமைகளை செய்யவில்லையென கல்வி இலாகாவிற்குத் தெரியவந்துள்ளதாம்.

சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் காரியாலயத்திலிருந்து கதைத்துக்கொண்டிருந்தபோது அங்கு திடீர் விஜயம் செய்த கல்வி இலாகா அதிகாரிகளிடம்சிக்கிக்கொண்டனராம்.

சில ஆசிரியர்கள் இரு தினங்களிலும் பாடசாலைக்கு தாமதித்து வந்ததாகவும், மற்றும் சில ஆசிரியர்கள் வரவைப் பதிந்துவிட்டு நண்பகலுடன் சென்று விட்டனரென்றும் கல்வி இலாகாவிற்குத் தெரியவந்துள்ளதாம்.

இவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்காக விளக்கம் கோரப்படவிருப்பதாக கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

# வரி விளம்பரம்


### தேவை

உங்கள் பண்டங்கள்° பொருட்கள் விற்பனைக்குத் தொடர்புகொள்ளுங்கள். பதி அன்லோ, 99, ஹல்ஸ்டோவ் (Hulftsdrof) வீதி, கொழும்பு-12 1553

### பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1501

### கரைதுறைப்பற்றுப் ப. நோ. கூ. சங்கம் முல்லைதீவு

## கேள்விப் பத்திரம் வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 20-2-79க்கிடையில் மேற்படி காரியாலயத்தில் வந்துபார்வையிட்டு சாக்கின் தரத்திற்கேற்ப விலைகளையும் குறிப்பிட்டு எம்மிடம் சமர்ப்பித்து முற்பணமாக ரூபா 25/-ம் கட்ட வேண்டும். தமிகள் கேள்விப்பத்திரங்கள் வரவும் பரிசிலனை செய்யப்பட்டு கூடிய கேள்விக்காரருக்கு சாக்குகள் வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்.
1535


## புங்குடுதீவில் பசுபதிப்பிள்ளை படிப்பகம்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவின் கல்வி, கலாச்சார, சமய பணிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து பலபாடசாலைகளை உருவாக்கியும் சமய நிறுவனங்களை இயக்கியும் தொண்டாற்றிய பெரியார் பசுபதிப்பிள்ளையின் பெயரில் புங்குடுதீவில் ஒரு படிப்பகம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: ஆசிரியர் வீ பேரம்பலம், உபதலைவர்: ஏ. பாலச்சந்திரன், செயலாளர்: ச. கிருபானந்தகுமார், உபசெயலாளர்: ச. தங்கராசா, பொருளாளர்: ஆசிரியர் த. மகாலிங்கசிவம், உபபொருளாளர்: த நடராசா,

நிர்வாகக் குழுவினர்: ம. இந்திரஜித், ச. நகுலகுமார். அ திருஞானலிங்கம், க. சிவநேசன், இ. வேலாயுதம், அ, புஷ்பராசா, க ஐயாத்துரை, ச. செல்வானந்தன், ஆ. தங்கவேல்.

போஷகர்கள்: புலவர் ஈழத்துச்சிவானந்தன் ச சதாசிவம் சேவியர், க. சந்திரசேகரம், ஆசிரியர் சி. பரராஜசிங்கம், சிறப்புப் பிரதிநிதிகள்: நா. சண்முகம், நா. நெல்லிநாதன், செ, நடனசபாபதி.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# தமிழ் பகுதிகளை சுவீகரிக்க அரசு திட்டமிட்டு செயல்படுகிறது

## அராலியில் வட்டு. எம். பி.

(சங்கானை)

தமிழ்ப் பிரதேசத்தை சுவீகரிக்க அரசாங்கம் திட்டமிட்டு செயல்படுகின்றது. இதன் காரணமாக குடியேற்றத் திட்டமெனக் கூறிக்கொண்டு சிங்கள மக்களை தமிழ் பகுதிகளில் அரசசெலவில் வீடுகள் அமைத்துக் கொடுத்து குடியமர்த்திவருகிறது. இது தமிழ் மக்களின் விருப்பிற்கு மாறான செயவாகும். இதே வேளையில் சிங்கள, தமிழ் சமூகத்தவர் நாட்டின் எப்பகுதியிலும் தாமாகவே குடியேறுவதை நாம் எதிர்க்கவில்லை.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு அராலி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை பெற்றோர்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். தங்கத்துரை தலைமையில் நிகழ்ந்த வைபவத்தில் வட்டு. எம். பி. மேலும் கூறியதாவது;-

தார்மீக அரசு என கூறிக்கொண்டு கல்வியில் தரப்படுத்தலை புகுத்தியும் பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம் போன்றவற்றை மேற்கொள்வதாலும் சிறுபான்மையோரான தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பையே அரசு எதிர்நோக்க நேரிடும்.

தமிழ் மக்களே தமது பிரதேசத்தில் குடியிருக்க நிலமின்றி இருப்பது அரசிற்கு தெரிந்தும் சிங்கள குடியேற்றத்தை தமிழ்ப் பிரதேசத்தில் வலிந்து செய்வதிலிருந்தே அவர்களின் நோக்கம் என்ன என்பதை நாம் உணரக்கூடியதாகவுள்ளது.

இப்பகுதி மின்வினியோகம் போன்றவற்றில் நான் என்னால் ஆன சிரத்தை எடுத்து இப்பகுதி மக்கள் குறைதீர ஆவன செய்வேன் என்றும் திரு. திருநாவுக்கரசு உறுதி கூறினார். [இ]

## இக்குளங்கள் திருத்தப்படும்

[நெல்லியடி]

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள குளங்களை புனரமைக்கப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் சுமார் 50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கத்தின் சிபார்சின் பேரில் மத்தொனி தாளங்குளிக் குளத்திற்கு 20 ஆயிரம் ரூபாவும், குடவத்தைக் குளத்திற்கு சுமார் 10 ஆயிரம் ரூபாவுமாக இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## நேரில் பார்த்தனர்

[நெல்லியடி]

தேசிய வீடமைப்பு ஆணையாளர் திரு. கே. ராஜரத்தினம் கன்பொல்லை மாதிரித் திட்டத்திற்குரிய பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டார். உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் ஆயோரும் அவருடன் சென்றிருந்தனர்.

இவர்கள் நில அளவைத் திணைக்களம் மேற்கொண்டு வரும் வேலைகளையும் பார்வையிட்டனர். [அ]

## "மாணவர்களின் உளப்பாங்கிற்கு அமைய கற்பித்தல் அமையவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"ஆசிரியத் தொழில் புனிதமானது; ஆசிரியர் கடமையில் தவறினால் எமது பிற்சந்ததியினருக்குப் பெரும் தீங்கிழைத்தவர்களாவோம். கல்வித் திட்டம் எதுவானாலும் அதைச் சிறப்படையச் செய்வது ஆசிரியர்களது ஊக்கமும் அக்கறையுமே. எந்த ஒரு மாணவரையும் கற்பிக்கமுடியாது என்ற நிலை பொருத்தமற்றதாகும். மாணவரை அவரவர் நிலைக்கேற்ப முன்னேற்றமடையச் செய்ய ஆசிரியர் முயற்சிப்பதே விவேகமானது."

இவ்வாறு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்களுக்காக மேற்படி கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கூறினார்.

ஆரம்ப வகுப்புகளில் ஒன்றிணைந்த பாடத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவது சம்பந்தமாக நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கு பாடசாலை அதிபர் திரு வி சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. கருத்தரங்கு முடிவில் கல்லூரி உப அதிபர் திரு. ந. சிவபாதம் நன்றி தெரிவித்துப் பேசினார். [அ]

## அனுராதபுரத்தில் தேசாய் புத்தபிரான் சிலை தரிசனம்

[கொழும்பு]

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் நேற்று அனுராதபுரம் புராதன நகருக்கு விஜயம் செய்து புத்தர் சமாதி சிலையைத் தரிசித்தார்.

திரு. தேசாய் கண்டியிலிருந்து காலை 9 மணிக்கு ஹெலிகாப்டர் விமானத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கும் சிகிரியாவுக்கும் மேலாகப் பறந்து அனுராதபுரத்தை அடைந்தார்.

அனுராதபுரத்தில் புனித இடங்களைப் பார்வையிட்டதுடன் வெள்ளரசு மரத்தையும் சமாதி நிலையில் உள்ள புத்தபிரானின் சிலையையும் தரிசித்தார். [இ]

## "சைவத்துக்காக தனது வாழ்க்கையை 'அர்ப்பணித்தவர்"

(யாழ்ப்பாணம்)

"நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவாகவும், எமது சிவானந்த குருகுல பாடசாலையின் ஸ்தாபகராகவும், எமது சமயத் தலைவராகவும் பணியாற்றி, எமக்கெல்லாம் வழிகாட்டியாகவிருந்த சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்களின் மறைவு, ஈடு செய்யமுடியாதது" என்று சிவானந்தகுருகுல பரிபாலன சபை வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையில் மேலும் கூறுவதாவது:-

"இந்துமதபீடாதிபதி", "பிரதிஷ்டாபூஷணம்", "பிரதிஷ்டாதிலகம்" முதலிய பல சிறப்புப் பெயர்கள் கொண்டவரும், வேத-சிவாகம, சமஸ்கிருத-தமிழ் பேரறிஞரும், ஈழத்திலுள்ள இந்து சமயத்தவர்கள் யாவருக்கும் சிறப்பாக பிராமண குருமார்களுக்கும் ஒப்பற்ற தலைவராகவும், இலங்கைக் குடியரசு, கலாசார அமைச்சரால் நியமிக்கப்பட்ட இந்துசமய விவகார ஆலோசனைச்சபையின் அதிமுக்கிய உறுப்பினராகவும் சிறப்புடன் பணிபுரிந்துள்ளார். சைவத்துக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்த இப்பெரியாரின் அநாயாச அந்தர்த்தானம், இறைவன் அவரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டதையே உணர்த்துகிறது.

## கொடிகாமம் பற்றைக்குள் முகத்தில் காயங்களுடன் ஆணின்சடலம்

[கொக்குவில்]

கொடிகாமத்தில் அடையாளம் காணப்படாத ஆணின் சடலம் ஒன்று புகையிரத வீதிக்கருகில் உள்ள பற்றைக்குள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்திற்குச் சென்ற விவசாயி ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்ட இச்சடலத்தின் முகத்தில் பலத்த காயம் காணப்படுகிறது.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க இச்சடலத்தைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றி விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சடலம், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [க-அ]

## அமைச்சர் தேவா வியாழன் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கிறார்.

யாழ்ப்பாண ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களும், பிரமுகர்களும் அமைச்சரைச் சந்திக்கவிருக்கின்றனர்

இச்சந்திப்பின்போது யாழ். மாநகர சபைத் தேர்தலில், ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி ஆலோசிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களை, தொடர்ந்து இயங்கச் செய்வது பற்றியும் ஆலோசிக்கப்பட இருக்கிறதாம். (க-அ)

## சிகரட்டுகள் பறிமுதல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் அதிகவிலைக்கு விற்கப்பட்ட சிகரட்டுகள் யாவும் பொலிசாரினால் பறிமுதல்செய்யப்பட்டன.

சிகரட் வியாபாரிகள் முன்பாகச் சுற்றிநின்று கூடியவிலைக்கு சிகரட்டுகளை மக்கள் வாங்கிக்கொண்டிருந்த சமயம் அங்குவந்த பொலிசார் சிகரட்டுகளையும் சிகரட் விற்கப்பட்ட பணத்தையும் விசிஎறிந்தார்கள். இதனால் அவ்விடத்தில் நின்றவாகள நாலுபக்கமும் சிதறி ஓடினார்கள் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையில் சுமார் 15 பொலிசார் இந்த சிகரட் பைக்கட்டுகளைக் கைப்பற்றி எச்சரித்துவிட்டுச் சென்றனர். நேற்று முன்தினம் இச்சம்பவம் நடைபெற்றது. [கா]

# மனைவி மக்களுடன் குளித்தவர் குளத்திற்குப் பலி!

[கொக்குவில்]

மனைவி மக்களுடன் குளத்துக்குக் குளிக்கச் சென்ற ஒருவர் குளத்திற்கே பலினார்.

இப்பரிதாப சம்பவம் நல்லூரிலுள்ள பண்டாரக்குளத்தில்இடம்பெற்றது:

சாரதியாக கடமையாற்றிய நாகலிங்கம் சுந்தரலிங்கம் [48 வயது] தனது மனைவியுடனும் 5 பிள்ளைகளுடனும் பண்டாரக்குளத்தில் குளித்துக்கொண்டிருக்கையில் ஒருகரையில் இருந்து மறுகரைக்கு நீந்த முற்பட்டபோதே இப்பரிதாப மரணம் சம்பவித்ததாம

மரணமானவரின் மனைவி மகேஸ்வரியும் மகள் சத்தியதேவியும் மரணவிசாரணையின் போது சாட்சியமளித்தனர்

யாழ் சிறுகுற்றத்தடுப்புப் பகுதி பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ் இரத்தினசபாபதி மரணவிசாரணையின் போது சாட்சிகளை ஆஜர் செய்தார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தி விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினார். [இ]

## பாரியநீர்த்தாங்கி

[நெல்லியடி]

மந்திகையிலுள்ள அரசாங்க கட்டிட வேலைப்பகுதிக்கென நிர்மாணிக்கப்பட்டுவரும் பாரிய நீர்த்தாங்கி வேலைகள் முடிவுறும் கட்டத்தையடைந்துளது. இத்தாங்கி வேலைகள் அண்மைக்காலத்தில் பெய்த பெருமழை காரணமாகச் சிறிது தாமதம் அடைந்திருந்தது. [அ]

## அனுதாபம்

[நெல்லியடி]

பருத்தித்துறை எப ஜி. ஆர். பொதுப்பணி மன்றம், வடமராட்சிக் கலைஞர் வட்டம் என்பன மறைந்தஈழத்துத் திரைப்பட நடிகரும் நாடகக் கலைஞருமான ஸ்ரீ சங்கரின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றின. [அ]

# 20 லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சி அபிவிருத்தி!

[உருத்திரபுரம்]

கிளிநொச்சித் தொகுதியின் அபிவிருத்தி வேலைகளுக்கென இவ்வருடத்தில் 20 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இத்தொகுதியின் நீர்ப்பாசனம், பாடசாலைகளில் குடிநீர் வசதி, மலசலகூடங்கள் அமைத்தல், மின்சார வசதி போன்றவற்றிற்கு இப்பணம் செலவிடப்படும். என கிளிநொச்சி எம். பி, இத்தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள 11 பாடசாலைகளுக்கு 50 ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடங்களும் குடிதண்ணீர் விநியோகமும் ஏற்படுத்தப்படவுள்ளன.

பாடசாலைகள் புனரமைப்புக்கென ஏறக்குறைய 2 லட்சம் ரூபாவில் இராமநாதபுரம் தெற்கு தமிழ்க்கலவன் பாடசாலைக்கும் கரடிப்போக்கு சென்திரேசா பாடசாலைக்கும் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடங்களும் கட்டப்படவுள்ளன.

வட்டக்கச்சி விவசாய விரிவாக்க நிலையத்திற்கு கிளிநொச்சியில் இருந்து 3 லட்சம் ரூபா செலவில் மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் வட்டக்கச்சிக் குடியேற்ற வாசிகளும் ஆண்கள் விவசாயப் பயிற்சிப் பாடசாலையும் கூடிய பயனைப்பெறுவர்.

அத்துடன் கிளிநொச்சித் தொகுதி நீர்ப்பாசனத்திற்கென மூன்றரை லட்சம் ரூபாவும். நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கென 4 லட்சம் ரூபாவும் இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. (அ)

# நாளை நடக்கும் ஹர்த்தால்: தமிழ்க் காங்கிரஸ் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள இயக்கங்கள் கோரிக்கைப்படி நாளை புதன் கிழமை தமிழ்ப் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்வதென தமிழ்க்காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

தமிழ்க்காங்கிரஸ் செயற்குழுக்கூட்டம், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சிவசிதம்பரம் ... ரப்பிள்ளை தலைமையில் அவரது இல்லத்தில் நடந்தது. சுமார் 5மணி நேரம் நடந்த இக்கூட்டத்தில் 26 செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சுதந்திர தினத்தையொட்டி நாட்டில் நடைபெறும் வைபவங்கள் எதிலும் தமிழ் மக்கள் பங்கு பற்றக் கூடாதென்றும் தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

## சமுதாயத்தைப் பாதிக்கும்

தரப்படுத்தலை எதிர்த்து நடைபெறும் பாடசாலைப் பகிஷ்கரிப்பை ஆதரிப்பதாகவும், அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும், சகல ஆசிரியர்களும் முற்றுமுழுதாக தமிழ் சமுதாயத்தைப் பாதிக்கும் தரப்படுத்தலை எதிர்த்து நடக்கும் பகிஷ்கரிப்பில் பங்குபற்றவேண்டும்என்ற தீர்மானமும் நிறைவேறியது. இத் தீர்மான விபரம் வருமாறு:

"ஏற்கனவே இந்த ஆளும் கட்சியான, ஐக்கிய தேசியக் கட்சி, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில், எல்வித தரப்படுத்தலையும் முற்றாக ஒழித்து திறமையின் அடிப்படையில் சர்வகலாசாலை அனுமதி வழங்கப்படும் என்று கூறியதை மறுத்தும், ஜனாதிபதி வெளிநாட்டு விஜயத்தின் போது இந்தியாவில் வெளிப்படுத்திய கொள்கைக்கு மாறாகவும் தற்போது அரசு கையாளவிருக்கும் தரப்படுத்தலை எதிர்த்து தமிழ் மக்களால் நடாத்தப்படும் பாடசாலைப் பகிஷ்கரிப்பை முற்றுமுழுதாக ஆதரிப்பதுடன் பூரண ஒத்துழைப்பையும் கொடுக்கின்றோம். ஆசிரியர்களையும் முற்றுமுழுதாக இப்பகிஷ்கரிப்பில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம். நூற்றுக்கு நூறுவீதம் ஆசிரியர்களிடம் ஒற்றுமை இருக்குமானால் இந்த நடவடிக்கைகளால் எதுவித கஷ்டங்களும் நிகழமாட்டாது என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

"தமிழ் மக்கள் தங்கள் அபிப்பிராயங்களை, இயக்கங்கள் மூலமாகவோ, அல்லது சட்டத்திற்கமைந்த நடவடிக்கை மூலமாகவோ அரசுக்கு எடுத்துரைக்கும் சுதந்திரத்தை நசுக்கும் நோக்குடன் பாடசாலைப் பகிஷ்கரிப்பை ஆதரிக்கும் பிரசுரங்களை விநியோகம் செய்யும் இளைஞர்களை கைது செய்வதனையும், எதுவிதத்திலும் தண்டிப்பதையும் காங்கிரஸ் வன்மையாகக் கண்டித்து ஆட்சேபிக்கிறது."

தேர்தல் சட்டதிருத்தம். கிராம கவுன்சில் எல்லை நிர்ணயகுழு ஆகியவற்றிற்கு மகஜர் சமர்ப்பிக்க குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. (க)

## சித்தி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து. 1978-ம் ஆண்டு நடைபெற்ற 5ம் தரப்புலமைப் பரிசில் தேர்வில் கனகலிங்கம் கிரிதரன், சுப்பிரமணியம் சிவசுதன், நாகராசா மதிவதனி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கெ)

# மக்கள் கருத்து

## தபால் சேர்ப்பதில் வவனியா மக்கள் கஷ்டம்

வவனியா வைரவபுளியங்குளம் சந்தியில் கடந்த பல ஆண்டுகளாக இருந்துவந்த தபாற்பெட்டி, சில மாதங்களுக்கு முன்பு மூடி திறந்திருந்த நிலையில் காணப்பட்டது. பின்பு மூடி கழற்றப்பட்ட நிலையில் காணப்பட்டது. இப்போது பெட்டியே கழற்றப்பட்ட நிலையில் வெறும் தூண் மட்டுமே காணப்படுகிறது. இதுபற்றி உரிய அதிகாரிகளிடம் முறையிட்டு மாதக்கணக்காகியும் எதுவித பலனும் கிட்டவில்லை எனப் பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இந்தத் தபாற்பெட்டி இல்லாததினால் அதிக தூரம் நடந்துசென்று பஸ்நிலையத்தில் உள்ள தபாற்பெட்டியிலோ அல்லது தபால்நிலையத்திலுள்ள பெட்டியிலோ மக்கள் தமது தபால்களைச் சேர்க்கவேண்டியுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல், பெருமளவு அரசாங்க உத்தியோகத்தர்களின் விடுதிகள் அமைந்திருக்கும் உள்வட்ட வீதியிலுள்ள தபாற்பெட்டியும், வவனியாத் தபால்நிலையத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள கோயிற்குளத் தபாற்பெட்டியும், குடியிருப்புப் பிள்ளையார்கோவில் சந்தியில் அமைந்திருக்கும் தபாற்பெட்டியும், மூடி திறக்கப்பட்ட நிலையிலேயே காட்சியளிக்கின்றன. அதனால் இப்பகுதியில் வாழும் மக்களும் தபால்நிலையத்தை நாடியே தங்கள் கடிதங்களுடன் வரவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டிருக்கிறது.

பெருந்தொகையான மக்கள் வாழும் இப்பகுதியில் தொடர்ந்தும் இப்படியான தொரு நிலை நீடிப்பது நல்லதல்ல. பொதுமக்களின் சௌகரியத்தையும், நலனையும், நேரவிரயத்தையும் கவனத்திற் கொண்டு தபாற்பகுதியினர் கழற்றப்பட்ட தபாற்பெட்டியைத் திரும்பவும் இடம் பெறச் செய்யவும், கதவு திறக்கப்பட்டிருக்கும் தபாற் பெட்டிகளைச் சீர்செய்யவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என வவனியா மக்கள் அங்கலாய்க்குறார்கள்.

பா. சிவதாசன்
வவனியா.

## கடன்சபைத் தேர்தலும் ஆசிரியர்களும்

29-1-79 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான கடன் சபைத் தேர்தல் முடிவுகளை வாசித்தேன்; அதிர்ச்சியடைந்தேன்.

யாழ். மாவட்டத்தில் 7,600 ஆசிரியர்களில் 3.268 பேர் மட்டுமே இத்தேர்தலில் வாக்களித்திருந்தனர்.

இத்தேர்தல் பாடசாலை நாட்களில் நடாத்தப்பட்டிருந்தால் அநேக ஆசிரியர்கள் வாக்களித்திருக்கக்கூடும். சென்ற கடன்சபைத் தேர்தல் இதற்கு உதாரணமாகும். அத்துடன் இக்கடன்சபையால் பாடசாலைக்கோ அல்லது மாணவருக்கோ எதுவித பயனும் இல்லையென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

மேலும் ஆசிரிய வர்க்கம், ஒரு படித்த வர்க்கம். வருங்கால சமுதாயத்தைச் சரியான வழியில் நடத்திச் செல்லவேண்டியவர்கள் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி முன்மாதிரியாக நடக்கவேண்டிய ஆசிரியர்கள் வாக்களித்தபோது 84 வாக்குச்சீட்டுகள் கழிவடைந்ததன் மர்மம், பெற்றோராகிய எமக்கு ஆச்சரியமளிக்கிறது.

அ, குலசேகரம்
சாவகச்சேரி.

## கும்பழாவளையில் கும்பாபிஷேகம்

[பண்டத்தரிப்பு]

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை நடைபெறுகிறது.

கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்யும் அத்துடன் இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனம் இக் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை படமாக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளர் திரு. சரத் அமுனுகமவுடன் காங்கேசன்துறைத் தொகுதி ஐ. தே. க அமைப்பாளர் திரு. எஸ். கே. என். சிவராசா தொடர்பு கொண்டு இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். [இ]

## "இன்றைய குழந்தை நாளைய முதல்வன்"

[யாழ்ப்பாணம்]

யாழ். வை. எம். சி. ஏ.யின் சனிக்கிழமை நிகழ்ச்சி வாரா வாரம் சுண்டிக்குளியிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில்நடைபெற்றுவருகிறது.

'இன்றைய குழந்தை நாட்டின் நாளைய முதல்வ'ன் என்ற பொருளில் சிறுவர்களுக்காக நடைபெற்றுவரும் இந்நிகழ்ச்சிகள் சனிக்கிழமைகள் தோறும் காலை 9-30தொடங்கி 11-39 வரை நடைபெற்று வருகின்றது. (கூ-அ)


இதோ!

நெல்ட்ரோனிக்

மொடல் : ஸிஆர் - 2855 எஸ்

ஏஎம்/எஸ்டபிள்யு/எவ்எம் ரேடியோ
கஸெட் டேப் ரெக்கோடர்

- ஓட்டோமெடிக் ஷட் ஓவ்
- உள்ளேயே அமைந்த மைக்ரோ போன்
- மொனிட்டர் சுவிட்ச்
- சுய மட்ட கட்டுப்பாடு
- ஏசி/டிசி இயக்கம்
- டின் ஜாக் - ஸ்லீப் சுவிட்ச்




இலவசம்
- ஒரு செட் பற்றிகள்
- கஸெற் மற்றும் இயர்-போன்

- 6 மாத உத்தரவாதம் -

ரி. ஏ. ஜே. நூர்பாய் அன்ட் கம்பனி லிமிட்டெட்
அவுஸ்திரேலியா கட்டிடம்
யோர்க் வீதி, கொழும்பு 1. தொலைபேசி: 27236 - 27245

### கொமேனி --- பக்தியார்

# பலப்பரீட்சை ஈரானில்

## நெருக்கடியைத் தோற்றுவிக்கும்

### சி. ஐ. ஏ. தலைவர் எச்சரிக்கை

வாஷிங்டன், பெப். 5

ஈரானில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில்பிரதமர் டாக்டர் பக்தியாருக்கும் சமயத் தலைவர் அயத்தொல்லா கொமேனிக்கும் இடையே ஏற்பட்டுள்ள பலப்பரீட்சையினால் ஈரானில் பெரும்அரசியல் நெருக்கடி ஒன்று விரைவில்ஏற்படும்.

இவ்வாறு அமெரிக்க மத்திய உளவறியும் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இன்னும் ஒரு சில தினங்களில் இங்கு நெருக்கடி உருவாகி, முன்னர் ஏற்பட்டதைவிட மேலும் மோசமான கலவரங்கள் இடம்பெறுமென்றும் அமெரிக்க மத்திய உளவறியும் ஸ்தாபன அதிபர் திரு அட்மிரல் ரேணர் எச்சரித்துள்ளார். (இ)

### 8 அமைச்சர்கள் ராஜினாமா!

புதுடில்லி, பெப், 5

உத்தரப்பிரதேச மாநில அரசைச் சேர்ந்த எட்டு அமைச்சர்கள் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளனர்.

நம்பிக்கையுடனும் நேர்மையுடனும் கடமையாற்ற முடியாதிருப்பதனாலேயே தாம் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முடிவு செய்துள்ளதாக அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இவர்களுள் ஆறுபேர் அண்மையில் லக்னோவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை வெளியேற்றவேண்டுமென்று வலியுறுத்தியவர்கள் ஆவர். (இ)

தமிழ்க்காங்கிரஸ்

## சகல உள்ளூராட்சித் தேர்தல்களிலும் போட்டியிடும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை உட்படச் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதெனத் தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு முடிவுசெய்துள்ளது.

தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தலைமையில் அவரது இல்லத்தில் காங்கிரஸ் செயற்குழுக்கூட்டம் நடந்தது.

யாழ்ப்பாணம் மாநகரசபை,வவனியா, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை உட்படச் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும், தமிழ்க்காங்கிரஸ் சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை அந்தந்தத் தொகுதிக்கிளைகள் செய்து அபேட்சகர் பட்டியலைத் தலைமைப் பீடத்திற்கு அனுப்பவேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது. [ஈ-அ]

### "யாழ்- வை. எம். சி. ஏ. விளையாட்டுப் போட்டி"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ,யின் மாபெரும் 12வது ஆண்டு விளையாட்டு விழா அடுத்த மாதம் 1ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

பட்மின்டன்,!! டேபிள்டெ டெனிஸ், கரம்செஸ், டிராவ்ஸ் ஆகிய விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெறும். (அ)

### யாருடையது?

வீ ஜெயபாலசிங்கம் என்பவரால் மானிப்பாய் வீதியில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை ஒன்று காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அத்தாட்சி காட்டிபெற்றுக்கொள்ளலாம்.

### "ஈரானியபிரதமர்பக்தியார்

# அமெரிக்க அரசின் கைப்பொம்மை"

### சமயத்தலைவர் சாட்டை

தெஹ்ரான், பெப், 5

"அமெரிக்காவின் கைப்பொம்மையாகப் பிரதமர் பக்தியார் இருந்து வருகிறார்" என்று ஈரானிய சமயத்தலைவர் கொமேனி குற்றஞ் சாட்டினார். ' ஈரானில்இருந்த வெளிநாட்டவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை ஈரானின் தற்பேரதைய நிலைகுறித்து அமெரிக்கா ஆழ்ந்த அக்கறையுடன் அவதானித்து வருகின்றது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### ஜெயப்பிரகாசரை ஜெகஜீவன் பார்த்தார்

பட்னா, பெப். 5

இந்திய உதவிப் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான திரு. ஜெகஜீவன்ராம் நேற்று பட்னாவில் சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணைச் சந்தித்து உரையாற்றினார்.

சிறிது கையினமுற்றிருக்கும் அவரது உடல் நலம் பற்றியும் திரு. ஜெகஜீவன்ராம் விசாரித்தறிந்துகொண்டார். (இ)

# "சமய அனுஷ்டானங்களை ஒழுகுதல்மட்டும் சமயவாழ்க்கையாகாது"

### — சாந்தானந்தஜி

[அரியாலை]

'சமய அநுட்டானங்களைப் பின்பற்றுதல் சமய வாழ்க்கையாக அமையாது. சமயத்தை வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைத்து அதன்படி வாழ்க்கை முறையை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் உண்மையான சமய வாழ்க்கையாக அமையும். படித்த பண்புள்ள சமுதாயம், எல்லா மதங்களும் போதிக்கும். நற்போதனைகளை ஏற்று அதற்கு மதிப்பு அளித்து வாழவேண்டும். மத வேடதாரிகள் யாரும் நிலைக்க மாட்டார்கள். அவர்களது நிலை மிகவும் பரிதாபமாக அமையும்'

இவ்வாறு சுவாமி சந்தானந்தா யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி பீற்மே மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற மாணவர்களின் கூட்டத்தில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு சீ. ஈ. ஆனந்தராசா சுவாமிகளையும். அவரது குழுவினரையும் வரவேற்றுப் பேசி சுவாமிகளுக்கு மலர் மாலை அணிவித்துப் பாராட்டைத் தெரிவித்தார்.

சுவாமி தொடர்ந்து குழுரை நிகழ்த்துகையில்கூறியதாவது: 'நல்லதொரு சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையதாகும். மாணவர்களிடையே பரந்த அறிவையும், அன்புள்ளத்தையும், சமநிலையான போக்கையும், வலுவான முதுகெலும்பையும் கொண்ட மாணவர் சமுதாயத்தைக் கட்டி வளர்க்க வேண்டும். இதுதான் நல்லாசிரியரின் சிறந்த கடமையாகும் மாணவர்கள் பெரியோர்களையும், வங்கள் குருவாகிய ஆசிரியர்களையும் கனம்பண்ணி வாழும் வாழ்க்கையையும், எல்லா மதங்களிலும் கூறப்படும் நற்பண்புகளையும் பேணி நடக்கும் பண்பாட்டையும் கொண்டவர்களாகவும் வாழ வேண்டும்.''

கல்லூரியின் சார்பில் சுவாமிஜிக்கும் அவரது குழுவினருக்கும் தேநீர் விருந்துபசரணை அளிக்கப்பட்டது. (அ)

## கருணாநிதி-பெர்னாண்டஸ் சந்தித்துப் பேசினர்

சென்னை, பெப். 5

மத்திய தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் திரு மு.கருணாநிதியைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

மொழிப்பிரச்னை குறித்து இவர்கள் மிகஆவலுடன் கலந்துரையாடினராம்.

முக்கிய அரசியல் பிரச்னைகள் பற்றியும் இவர்கள் பேசிக்கொண்டனர். (இ)

## சாவகச்சேரி பஸ்சேவைபற்றி ஆராயப்பட்டது

(மட்டுவில்)

''பாடசாலை பஸ் சேவை ஒழுங்காக நடத்தப்படுவதன் மூலம், மாணவர் உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்ல வழிவகுக்கப்படவேண்டும். முக்கால்மணி நேரத்திற்கு மேல் ஒரு சேவை தாமதமாகுமானால் அல்லது அச்சேவை ரத்துச்செய்யப்படும் என்றால் அதே பஸ் கியூவில் நிற்கும் பிரயாணிகளுக்கு உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்'

சாவகச்சேரியில் நடைபெற்ற இ. போ. ச. மேலதிகாரிகள் மகாநாட்டில் சாவகச்சேரி எம். பீ. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்

தமது அபிவிருத்தி அலுவலகத்தில், திரு. நவரத்தினம் எம் பி. தலைமையில் இந்த மகாநாடு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இ. போ. ச டிப்போவைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள், தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேள், பனைநிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. ஜெயவீரசிங்கம், பாடசாலை அதிபர்கள், கிராமப் பிரமுகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் அங்கிகாரம்பெற்ற புதிய பஸ் சேவைகளான, டச்சு வீதி ஊடாக பருத்தித்துறைவரை புதிய சேவை, மட்டுவில் ஊடாக கல்வயல் சாவகச்சேரி ஆகிய

[5-ம் பக்கம் பார்க்க]

### 'பிரிட்டிஷ் பாஸ்போர்ட் உள்ள

## இந்தியர்கள் விசா இன்றி இந்தியாவர அனுமதி

புதுடில்லி, பெப். 5

பிரிட்டிஷ் "பாஸ்போர்ட்" வைத்திருக்கும் இந்தியர்கள் இந்தியாவுக்கு விசா இன்றி வந்துபோக அனுமதிக்கப்படுவர்

இத்தகவலை இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ பி. வாஜ்பாய் தெரிவித்தார்.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் இதற்காக புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்படுமென்றும் அவர் கூறினர். (இ)

# மொழிப் பிரச்னை சர்ச்சையை உடன் கைவிடுக

## தமிழக மக்களுக்கு கிரி வேண்டுகோள்

சென்னை, பெப். 5

மொழிப்பிரச்னைசர்ச்சையை தமிழக மக்களும் அரசியல்தலைவர்களும் கைவிடவேண்டும்.

இவ்வாறு முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு வி. வி கிரி வேண்டுகோள்விடுத்துள்ளார்

பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் நடத்தியகருத்தரங்கில் பேசுகையிலேயே திரு கிரி மேற்கண்டவாறு கூறினர்

மறைந்த தலைவர் திரு ஜவஹர்லால் நேருவின் மும்மொழித்திட்டமே இந்தியாவுக்கு மிகவும் பொருத்தமானது. இத்திட்டத்தையே இன்றைய அரசும் கடைப்பிடித்து வருகிறது. எனவே மொழிப்பிரச்னை குறித்த சர்ச்சையை சகலரும் கைவிட்டுவிட்டு நாட்டுநலனுக்காக உழைக்க வேண்டுமென்றும் திரு கிரி கூறினர். (இ)

# யாழ். வரும் அமைச்சர் முகமது

## ஜி. ஜி. சிலையைத் திறந்து வைப்பார்

[யாழ்ப்பாணம்]

குருநகர் மக்கள் சார்பில் நிறுவப்படவிருக்கும் அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் உருவச்சிலையை, போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச் முகமது இம்மாதம் 11ந் தேதி மாலை குருநகரில் திரைநீக்கஞ் செய்துவைப்பார்.

குருநகரில் அறிஞர் அண்ணாவின் சிலைக்கு எதிரிலுள்ள இடத்தில் அமரர் ஜீ. ஜீயின் சிலை நிறுவப்படும்.

அமைச்சர் ஜனுப் முகமது 11ந் திகதி காலை 11 மணிக்கு கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் யாழ். நகரை வந்தடைவார்.

அன்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, வெற்றிபெறுவோருக்கான பரிசில்களை அமைச்சர் வழக்குவார்.

அன்று மாலை 5-30 மணிக்குக் குருநகரில் அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் சிலையைத் திரைநீக்கஞ் செய்து வைப்பார்

12ந் தேதி காலை யாழ். கச்சேரியில் நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவார். இம்மகாநாட்டில் யாழ் மாவட்ட எம் பிக்கள், திணைக்கள, கூட்டுத்தாபனத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

அன்று பிற்பகல், யாழ். மத்திய பஸ்நிலையம், பிராந்திய அலுவலகம், யாழ் ரயில் நிலையம், காங்கேசன்துறை ரயில்நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடுவார்

பிற்பகல் 3-00 மணிக்குக் கொழும்பு திரும்புவார். [கஅ]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - ஜெயலலிதா
தெய்வமகன்

வெலிங்டன்... 

வெஸ்லி
(கரவெட்டி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மஞ்சுளா
எங்கதங்கராஜா

# வர்த்தக வங்கி வெற்றி

]யாழ்ப்பாணம்[

யாழ் வர்த்தக வங்கிக்கும் ஹட்டன் நாஷனல் வங்கிக்கும் இடையில் நடந்த இரண்டாவது வருடாந்த மென்பந்துக் கிரிக்கட் போட்டியில் வர்த்தக வங்கி ஆட்டம் முடிவிற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் 12 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஆரம்பத்திலிருந்து இறுதி வரை விறுவிறுப்பாக நடந்த இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

4-வது ஜனத்திரள் வாரம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா, நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் - கமலஹாசன் - ஜெய்சித்திரா
சொல்லத்தான் நினைக்கிறேன்

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ். நகர்) ஆசை அறுபதுநாள்

7-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் போன்: 466
தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily at, 4-30, 7-00 & 9-30 p. m
(Jaffna) GREGORY PECK in
MILLION POUND NOTE
(Color)

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
நூற்றுக்கு நூறு
(புதியபிரதி)

சாந்தி (யாழ்நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி... வாணிஸ்ரீ ... சரோஜாதேவி
சுந்தரராஜன் ... நாகேஷ்
கே பாலசந்தரின்
தாமரை நெஞ்சம்
(புத்தம் புதிய பிரதி)
9-2-79 "SEVEN NIGHTS IN JAPAN"

ராணி (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள் கடைசிவாரம்
எம் ஜி ஆர். - அஞ்சலிதேவி நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்
(புதிய பிரதி)
9-ந் திகதி முதல்
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறுள்

# இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 24-ந் திகதி
செவ்வாய்கிழமை
(6 2 79)

**மேடம்:-** செய் தொழிலில் தடுமாற்றநிலை தென்படும் வேண்டிய ஒருவரை பகைத்துக் கொள்ளநேரிடும் குடும்பத்தில் சிறுபிணி தோன்றும் பொறுமையைப் பேணி நடக்கவும்.

**இடபம்:-** மோதவரும் பகை மோசடி நடக்கும். மனதில் அமைதி குன்றும் பண விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** இலட்சியவாதிகளுக்கு சிறப்பான தினம். பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. நீண்ட நாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியடைவதற்கும் இடமுண்டு.

**கடகம்:-** பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். விவாதங்களில் ஏற்படும் அமைதிக்குப் பங்கம் ஏற்படும். நிதானம் விரும்பத்தக்கது.

**சிங்கம்:-** தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கும் எதிர்பாரத வகையில் பொருள் வரவுக்கு இடமுண்டு. வியாபார முன்னேற்றமும் உண்டு, சுபநாள்.

**கன்னி-:** உறவினர்வருகை மகிழ்ச்சிதரும், செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும். எதிர்பாராத சுபகாரியம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். மதிப்பு உயரும்.

**துலாம்:-** பகை மூட்டம் வட்டமிடும். அவசரப்போக்கு அனர்த்தங்களுக் கிடமளிக்கும் தெய்வநம்பிக்கையுடன் சமயோறுதபுத்தியும் வேண்டும்.

**விருச்சிகம்:-** களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரரமான சம்பவம் இடம் பெறும். காதலர் வாழ்வில் கனகுஷியான தினம் வாழ்க்கையில் உற்சாகம் நிரம்பியதாக விருக்கும்.

**தனுசு:-** முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றக்கூடும். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம். நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கிடமுண்டு. தொழிலிலும் தொல்லை உண்டு.

**மகரம்:-** புதிய நண்பர்களின் சேர்க்கைக்கும் மனதில் உற்சாகம் பிறக்கும்பிள்ளைகளினுல் பெருமைக்கு இடமுண்டு. மகிழ்ச்சி கரமான நாள்.

**கும்பம்:-** புதிய எண்ணங்கள் மலரும். தொழிலில் முன்னேற்றமுண்டு. சிலருக்கு இருப்பிடமாற்றமும் ஏற்படலாம். மகிழ்ச்சிகரமான நாள்.

**மீனம்:-** பெரியோர் ஆதரவுக்கு இடமுண்டு. தொழில் துறையிலும் நன்மாற்றங்களுக்கு இடமுண்டு. குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை தென்படும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## சாவகச்சேரி...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சேவைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும், சாவகச்சேரிவரை உள்ள பாடசாலை சேவை புத்தூர் சந்திவரை நீடிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பனை நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. ஜெயவீரசிங்கம் உடனடியாகச் சென்று வீதி ஒழுங்குகளைக் கவனிப்பதாகவும் உறுதியளித்தார்.

[உ]

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
SUBTERFUGE
(Murder)

# "கேளிக்கை விழாக்களைவிட மாணவர் கல்வி வளர்ச்சிக்கு பாடுபடுவது மேல்"

(யாழ்ப்பாணம்)

வசதி குறைந்த மாணவர்களுக்கு அதி சிறந்த கல்வி போதனையை குறைந்த கட்டணத்துடன் போதிப்பதும், அவர்களுக்காகபோட்டிப்பரீட்சைகளை நடாத்தி உற்சாகமூட்டி புலமைப் பரிசில்களாகப் புத்தகங்களை வழங்குவதும் "சனசமூகநிலையங்கள் தம் சமூகத்துக்கு செய்யும் ஏனைய தொண்டுகளைவிட சிறந்த தொண்டாகும். சனசமூகநிலையங்கள் கேளிக்கையானவிழாக்களை எடுப்பதைவிட மாணவர் கல்வி வளர்ச்சிக்காகப்பாடுபடுவது மேலானதே' இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சனசமூகநிலைய 'கல்வி ஆண்டு' புலமைப்பரிசில் வழங்கும்வைபவத்தில் பிரதமவிருந்தினராகவும், பரிசில் வழங்குநராகவும் கலந்துகொண்டு பேசிய யாழ். மாவட்ட தேர்தல்உதவிஆணையாளர் திரு. அ.ஜெயரத்தினம் குறிப்பிட்டார்.

மேற்படி நிலைய உபதலைவர் செல்வன் சி. சந்திரமோகன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் இன்று கல்வி கற்பதில் ஏத்பட்டுள்ள போட்டியைச் சமாமளிக்க வசதி குறைந்த மாணவர்கள் சிரமம் படநேரிடுகிறது. எனவே இலவச போதனை, குறைந்த செலவில் போதனை, புத்தகங்கள் அன்பளிப்பு, நேரச் சுருக்கங்களை ஏற்படுத்தும் போதனை நிலையங்கள் அவசியமென மாணவர் கருதுவர். இவ்வகையில் இத்தகைய தொண்டினை மேற்கொண்டுள்ள இந்நிலையத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

திரு. க. தர்மலிங்கம் உட்பட போதனாசிரியர்கள் பலர் உரையாற்றினர். நிலைய சிறுவர் பாடசாலை ஆசிரியை திருமதி யுகவதி ஆறுமுகம் நன்றி தெரிவித்தார். ]இ[

தமிழக திரைப் படத்தில்

# நடிகர் ரஜனிகாந்திற்குப் பதிலாக ஆழிக்குமரன் ஆனந்தன்

(வெள்ளவத்தை)

தமிழகத்தில் வெற்றிகரமாக ஓடிய 'அன்னக்கிளி' திரைப்பட விநியோகத்தரும், பல வெற்றிப் படங்களை தயாரித்தவருமான மதுரை சேனுஸ் பிலிம்ஸ் அதிபர் ஜனுப். மரிசூர் தாம் தயாரிக்கும் புதிய படத்தில் நடிகர் ரஜனிகாந்திற்குப் பதிலாக அவருக்காக தெரிவுசெய்யப்பட்ட பாத்திரத்தில் ஆழிக்குமரன் ஆனந்தனை நடிக்க ஓட்டல் தப்ரபேனில் வைத்து பகிரங்க அழைப்புவிடுத்தார்.

"நான் நடிகனல்ல, ஆனல் திகிலூட்டும் சாகஸங்கள் நிறைந்த படமொன்றில் நடிக்க விரும்பம் கொண்டுள்ளேன்" என்று ஆனந்தன் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில் தனது அடுத்த சாதனையை நிறைவேற்றிய பின்னரே படத்தில் நடிக்க விரும்புவதாக ஆனந்தன் தெரிவித்தார்.

தமிழகத்தில் நீச்சல் சாதனை ஒன்றை ஏற்படுத்த ஆனந்தன் விருப்பம் தெரிவித்தார் சுதற்கு ஜனுப் மர்சூக் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்தார்.

# வயாவிளான் உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி

[பலாலி]

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் அமரர் சி. கந்தவனம் ஞாபகார்த்தக் கேடயத்திற்காகநடாத்திவந்த 1ம் பிரிவு உதைபந்தாட்டக் சுற்றுப்போட்டியின்சாம்பியன் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. நொக்அவுட் முறையில் ஜனவரி 20ம் திகதி தொடக்கம் நடாத்தப்பட்ட இப்போட்டிகள் யாவும் சனசமூகநிலைய மைதானத்தில் இடம்பெற்றன.

11வீரர், 7 வீரர் என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியின் 11 வீரர் ஆட்டத்தின் சாம்பியன் போட்டியில் திருநெல்வேலி-ஒலிம்பிக் வி. கழகத்தை எதிர்த்து ஊறெழு றேயல் வி கழகம் மோதிக்கொண்டது. இப்போட்டியில்திருநெல்வேலி ஒலிம்பிக் வி கழகம் 3-2கோல்களால் வெற்றிபெற்று சி. கந்தவனம் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. சாம்பியனை இக்கழகத்திற்கு அமரர் வ. சுப்பிரமணியம் ஞாபகார்த்தக்கேடயமும் சொந்தமாக வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தைப் பெற்ற ஊறெழு றேயல் வி. கழகம் திரு. க. இலங்கைநாயகம்அன்பளிப்பு வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொண்டது. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. சீ எஸ். அருள்பிரகாசம் கடமையாற்றினுர்.

7 வீரர் ஆட்டத்தில் கட்டுவன் பாலர் ஞானோதய வி.கழகமும், ஊறெழு றேயல் வி. கழகமும் மோதிக்கொண்டன. இரு கழகங்களும்தலாஇரண்டு கோல்களைப்போட்டு இணைச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கட்டுவன் பாலர் ஞானோதய வி.கழகம் திரு. க. இலங்கைநாயகம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணத்தையும்; ஊறெழு றேயல் வி. கழகம், திரு க பொன்னம்பலம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது. இப் போட்டிக்கு மத்தியஸ்தராக திரு எம். பத்மநாதன் கடமையாற்றினுர். சுற்றுப் போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் நிலையச் செயலாளர் திரு எம் ஜெகநாதன் மேற்கொண்டிருந்தார். (கொக். நிரு)

# விளையாட்டுப் போட்டி நடத்த முடிவு

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு 6ம் வட்டாரம் ஐங்கரன் இளைஞர் மன்றம் வருடந்தோறும் அரியநாயகன் புலம் வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் தண்ணீர்ப்பந்தல் சேவையும், சிவராத்திரி தினத்தில் பரந்தஅளவில் விளையாட்டுப்போட்டி நடத்துவதென்றும் தீர்மானித்துள்ளது.

மன்றத்தின் நிர்வாகிகள் விபரம் வருமாறு! தலைவர்: து கணேசலிங்கம், செயலாளர்: சி. திருச்செல்வம், பொருளாளர்: இ. சந்திரகுமார், உபபொருளாளர்: பே. தர்மசீலன் போஷகர்கள்: ஆ. பொன்னம்பலம், சு செல்லத்துரை.

[அ]

# ஹர்த்தால் போராட்டம் நாளை நடந்தே தீரும்

## இளைஞர் பேரவை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பேசும் மக்களின் ஒத்துழைப்புடன் நாளை எமது ஹர்த்தால் போராட்டம் நடந்தேதீரும் என்று தமிழ் இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. எஸ் யோகநாதன் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"நாளை 7-ந் திகதி நடைபெறும் ஹர்த்தால் அரசினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்களை முன்வைத்து நடைபெறவுள்ளது தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளில் மாணவர்களுக்கெதிரான தரப்படுத்தலும் ஒரு அம்சமாகும்.

ஆனால் 1-ந் திகதி முதல் 7ந் திகதி வரையிலான பாடசாலைப் பகிஷ்கரிப்பே மாணவர்களது முழுமையான போராட்டமாகும்.

மாணவர்களது பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு தமிழ் இளைஞர் பேரவை பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. 7-ந் திகதி தரப்படுத்தலுக்கெதிரான பூரண ஹர்த்தால் ஒன்றை நடத்துவதாக மாணவர்கள் பகிரங்கப்படுத்தியிருப்பார்களாயின் மாணவர்களது வெற்றிகரமான போராட்டமாக அமைவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியிருப்போம்.

### முக்கிய காரணங்கள்

4 அல்லது 6-ம் திகதிகளில் நாம் நடத்த உத்தேசித்திருந்த ஹர்த்தால் போராட்டத்தை பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் இடையில் நடத்துவதில் உள்ள சிரமங்களாலேயே 7-ந் திகதிக்கு மாற்றப்பட்டது. ஹர்த்தாலுக்குரிய காரணங்களில் தமிழ் மாணவர்களுக்கெதிரான தரப்படுத்தலும், மாணவர்களால் ஜனநாயக ரீதியாக தரப்படுத்தலுக்கெதிராக துண்டுப்பிரசுரம் விநியோகித்த இளைஞர்களை கைது செய்யப்பட்டமையும் முக்கிய காரணங்களாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

"தமிழினத்துக்கு தொடர்ந்தும் பல இன்னல்களை ஏற்படுத்திவரும் அரசுக்கெதிராக நாம் முன்வைத்துள்ள காரணங்கள், தமிழ் மக்களுக்குத் தொடர்பற்றவை என அரசுக்காக குரல் கொடுக்கிறார்கள் எம்மவர் சிலர். சிராவஸ்தியில் சாப்பாடு சரியில்லையென்று பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டும் இன்றைய நிலையில் விலைவாசி ஏற்றம் போன்ற நடவடிக்கைகளால் சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்று கூறுவது தவறானதுதானா?

அரசின் திட்டமில்லாத இறக்குமதியால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாதுள்ளதையும் இதனால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும், நெசவாளர்களும் பாதிக்கப்படுவதையும் கூறுவது தவறானதா? அரசின் சுதந்திர வர்த்தக வலயம் மூலம் தமிழ் ஈழத்தின் இறைமைக்கு தமிழ் ஈழம் சுதந்திரம் பெற்ற பின் ஆபத்து உண்டென்பதை கூறுவது தவறானதா? தமிழ் ஈழம் ஆக்கிரமிக்கப்பட்ட நாடு போல் இம்சைப்படுத்தப் படுகிறதே இதைக் கூறுவது தவறானதா?

## சைக்கிள் ஜோடிகள் 50 பேர் கைது

[கொக்குவில்]

பக்கம் பக்கமாக சைக்கிளில் சென்ற சுமார் 50 பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

யாழ். நகரில் பக்கம் பக்கமாகச் சைக்கிளில் சென்றவர்களையும், இவ்வாறு சைக்கிளை உருட்டிச் சென்றவர்களையும் யாழ் போக்குவரத்துப் பகுதி உதவி இன்ஸ்பெக்டர் திரு சிசிரகுமார குணசேகர, சார்ஜண்ட் திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிசார் கைது செய்தனர்.

மீன்வியாபாரிகளும் ஐஸ்பழ வியாபாரிகளும் கூட இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனராம்.

## பகிஷ்கரிப்பு, ஹர்த்தால்

# இளைஞர் பேரவையுடன் இணைந்தே செய்கின்றோம்

## மாணவர் பேரவை அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"தரப்படுத்தலை எதிர்த்து தமிழ் மாணவர்களாகிய நாம் பெப்ரவரி 1-ந் திகதி முதல் 7-ந் திகதி வரை பாடசாலை பகிஷ்கரிப்பையும், 7-ந் திகதி பூரண ஹர்த்தாலையும் தமிழ் இளைஞர் பேரவையுடன் இணைந்தே செயல்படுத்துகிறோம்."

மாணவர்பேரவை அமைப்புச் செயலாளர்களான திரு. உ. தி. சி. ஆனந்தன், திரு. கு. ச. ச. குமார் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

"எமது நியாயபூர்வமான போராட்டத்திற்கு தமிழ் மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி எம்மை ஊக்குவிக்கவேண்டும்" என அன்புடன் வேண்டுகின்றோம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் மாணவர் பேரவை என்ற பெயரில், வெளியான பத்திரிகை அறிக்கைக்கும் [ஈழநாடு அல்ல] எமக்கும் எதுவித தொடர்பில்லையென்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (க)

# தரப்படுத்தலை எதிர்த்தே நாளை ஹர்த்தால்!

## வண்ணை ஆனந்தன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'இனி தமிழ் தலையெடுக்குமா? என்ற கேள்வியே இன்று மேலோங்கி நிற்கிறது. இக்கொடுமையை எதிர்த்து தமிழ் மாணவருக்கு இழைக்கப்படும் அநீதியை உலகரங்கில் நிலைநிறுத்தும் தமிழ் மாணவர் அணி பகிஷ்கரிப்பிலும் நாளை ஹர்த்தாலிலும் ஈடுபட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய செயற்குழு உறுப்பினர் வண்ணை ஆனந்தன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

இன்று சிறிமாவின் ஆட்சியில் நடந்த கொடுமையிலும் பார்க்க பன்மடங்கு பாதகத்தை விளைவிக்கும் வகையில் தார்மீக அரசு தரப்படுத்தலை அமுலாக்க நிற்கிறது.

குடியுரிமை, மொழியுரிமை, நிலவுரிமை இழந்து அடிமைப்பட்ட தமிழினத்தின் கையில் எஞ்சி இருந்தது கல்வி பயிலும் உரிமை மட்டுமே.

அடிமைப்பட்ட சமூகம் எதிர்காலத்திலும் தலையெடுக்காதவாறு அமைந்ததே தரப்படுத்தல். சிறிமாவின் ஆட்சியில் உருவான தரப்படுத்தல் என்னும் கொடுமையை எதிர்த்தே மாணவர் பேரவை உருவெடுத்து எதிர்த்தது.

# 9ம் திகதி கோர்ட்டில் ஆஜராவர்

[புலோலி]

புலோலி 1ம் கட்டையைச் சேர்ந்த வயோதிப மாது மர்மக் கொலை சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசார் கைதுசெய்து காவலில் இருக்கும் கந்தையா, பொன்னு ஆகிய இருவரும் இம்மாதம் 9ம் திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவர். (அ)

# திருமண அழைப்பு

## சிவபாலன்-ராஜராஜேஸ்வரி

நிகழும் 7-2-79 புதன்கிழமை முற்பகல் 9-00 — 11-00மணி வரையுள்ள கடகலக்ன சுப முகூர்த்தத்தில் எமது புதல்வன் திருநிறை செல்வன் சிவபாலன் அவர்களுக்கும் கல்வயல் இளைப்பாறிய ஆசிரியர் செ. முத்தையா தம்பதிகளின் புதல்வி திருநிறைசெல்வி ராஜராஜேஸ்வரி அவர்களுக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழும். உறவினர்களும், நண்பர்களும் வைபத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் - அரசாங்க ஒப்பந்தகாரர் சி. முருகேசுவும் பாரியாரும், 7, முதலாவது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் அவ்வண்ணமே விரும்பும் செ. முத்தையாவும் பாரியாரும், இளைப்பாறிய ஆசிரியர்கள், கல்வயல், சாவகச்சேரி. 5155

# சந்தைகளுக்குச் செல்ல வேண்டாம் என கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் முக்கிய சந்தைகளான கிளிநொச்சி, கொடிகாமம், சுண்ணாகம் சந்தைகளுக்கு நாளை செல்ல வேண்டாம்என வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

7-ம் திகதி புதன்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கோரும் துண்டுப் பிரசுரங்கள் நேற்று சந்தைகளில் வழங்கப்பட்டன. இளைஞர்களும், மாணவர்களும் இத் துண்டுப் பிரசுங்களை சந்தைகளில் விநியோகித்தனர்.

நேற்று யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் கடைகளுக்கு இளைஞர்களும், மாணவர்களும் குழுக்களாக சென்று 7-ந்திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்

இன்று சாவகச்சேரிச் சந்தையிலும் மாணவர்களும், இளைஞர்களும் 7-ந் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறுகோரி துண்டுப் பிரசுரம் வழங்கவிருப்பதாக இளைஞர் பேரவையினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

கூட்டுறவுச்சங்க ஊழியர்களும் நாளை நடைபெறும் ஹர்த்தாலில் கலந்துகொள்வார்களென்றும் கூட்டுறச்சங்க ஊழியர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

# ஈழத் தமிழர் . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றன" என்று திரு. அமிர்தலிங்கம் பதிலளித்தார்.

### ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டன

"சமாதானம் மூலமாக பேச்சுவார்த்தைகள் வழியாக எங்கள் பிரச்னைகளைத் தீர்க்க நாங்கள் பல முயற்சிகள் மேற்கொண்டோம். எல்லாமே அவர்களாலேயே உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன. எமது தலைவர் 1957ம் ஆண்டு திரு. எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்தார். இது பண்டா - செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. ஆனால் இதனை, அப்போது திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவும் அவரது கோஷ்டியினரும் கடுமையாக எதிர்த்தனர். ஒப்பந்தம் செயல்படவில்லை. இதன் பின்னர், 1965ம் ஆண்டு திரு டட்லி சேனநாயகாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது டட்லி-செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. இதனை அப்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அவரது கோஷ்டியினரும் கடுமையாக எதிர்த்தனர். இது பின்னர் செயல்படவில்லை. இவ்விதமாக, இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தின் மதிப்புப்பெற்ற இரண்டு தலைவர்களுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தி செய்துகொண்ட ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்பட்டு, கிழித்தெறியப்பட்ட நிலையில், பேச்சுவார்த்தை ஒப்பந்தம் செய்தல் போன்றவற்றில் நாம் எவ்விதமாக நம்பிக்கை வைக்கமுடியும்" என்று விளக்கிய திரு. அமிர்தலிங்கம்—

### தலைவிதியை நாங்களே . , .

"எங்களது பிரச்னைகளுக்கு இவ்விதமாக தீர்வு காணப்படாத நிலையில்தான் எமது தலைவிதியை நாங்களே தீர்த்துக்கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டோம்" என்று கூறினர்.

### வழி கூறுமாறு தேசாய் கேட்டார்

இக்கட்டத்தில் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் "உங்கள் பிரச்னைகளைத் தீர்க்க வழிகள், திட்டங்கள் எதுவும் இருந்தால் கூறுங்கள். சமாதானமான முறையில் எந்த அளவில் இத்திட்டங்கள் தீர்த்துவைக்கும் என்று முயற்சிப்போம்" என்று கூறவே, திரு அமிர்தலிங்கம்—

"எங்கள் நிலை, எங்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைகள்பற்றி நீங்கள் இப்பொழுது தெளிவாக அறிந்திருக்கிறீர்கள். குறுகியகால நேரத்தில் எங்களின் நிலையை உங்களுக்கு இங்கு விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன்" என்று தெரிவித்து—

"1958ம் ஆண்டு ஹிந்து பத்திரிகையில் திரு. ராஜகோபாலாச்சாரியார் பிரதேச சுயாட்சிக்கோரிக்கைபற்றி ஒருகட்டுரை எழுதியிருந்தார். அதில் அவர் பிரதேச சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்டதைத் தெளிவான காரணங்கள் காட்டி வற்புறுத்தி எழுதியிருந்தார். மகாத்மாகாந்தி அடிகள்கூட, மொழிவாரி மாகாணக் கோரிக்கைபற்றி பல சந்தர்ப்பங்களில் கருத்து வெளியிட்டு அதற்குச் சாதகமாக எழுதி மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்படுவதை வரவேற்றுள்ளார்" என்றார்,

### சுயமரியாதையை இழக்கமுடியாது

"நாங்கள் இந்தநாட்டில் ஒற்றுமையாக இருக்கவே விரும்புகின்றோம், ஆனல் நாங்கள் பலவகையிலும் அரசினல் புறக்கணிக்கப்பட்டும், எமது நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் நிலையிலும் எமது தலைவிதியை நாமே தீர்த்துவைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். சுயமரியாதையை எந்தக் கட்டத்திலும் நாங்கள் இழக்கத் தயாரில்லை. எமது சுயமரியாதைக்கு இழிவு ஏற்படாதவகையில் எம்மைப் பாதுகாக்கும் வழியில் எமது உயிருக்கு ஆபத்து ஏற்படாதவகையில் தீர்வு காணப்படவேண்டும். நாங்கள் அஹிம்சையில் மிகவும் பற்றுக்கொண்டவர்கள் காந்தியவழியை நாடுபவர்கள். எங்கள் குறைகள் ஈழத்தமிழரை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் - நெருக்கடிகள் பற்றித் தெளிவாகத்தெரிந்துகொண்ட நீங்கள், உங்கள் முயற்சியில் எமக்கு நீதி கிடைக்க முற்பட்டால் அதனை நிச்சயம் வரவேற்போம்" என்று திரு. அமிர்தலிங்கம் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயிடம் கூறினர்.

# மொரார்ஜி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவருடன் திறந்தவண்டியில் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவும் செல்வார்.

விமான நிலையத்தில் திரு. தேசாய்க்கு விமானப்படையினர் அணிவகுப்பு மரியாதை ஒன்றை அளிப்பர்.

பிற்பகல் 2 மணிக்கு திரு. மொரார்ஜி தேசாயும் அவரது குழுவினரும் விசேட விமானத்தில் தாயகம் திரும்புவார்கள். [இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 6-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.